உரை மற்றும் விளக்கப்படங்கள்: வில்லியம் டி வின்க்

# இயேசு கிறிஸ்து

## உலகத்தை மாற்றும் மனிதன்



# என்ன...

**ஆசிர்வாதம்**: தேவ விருப்பத்தை செய்கிற மக்களுக்கு எல்ல நன்மையையும் அவர் கொடுப்பார்.




**இயேசு**: தேவனுடைய குமாரனின் பெயர் அதாவது 'தேவன் காப்பாற்றுவார்'.

**ஈஸ்டர்**: இயேசுவின் உயிர்த்தெழுதல் விழா கொண்டாடப்படுகிறது. யூதர்கள் பாஸ்காவையும் அதே நாளில் கொண்டாடுகின்றனர். (பக்.38-54).



**உயிர்த்தெழுதல்**: இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தார்.ஒரு நாள் அனைவரும் மரணத்தில் இருந்த எழும்புவார்கள். பின்னர் கடவுள் ஒவ்வொரு மனிதனையும் நியாயந்தீர்ப்பார் (பக்.53-57)



**கடவுளின் மகன்**: இயேசு என்பது அவரின் பெயர்.அவர் ஒரு மனிதனாக பூமிக்கு வந்தார்.




**சாத்தான்**: கடவுள் மற்றும் மனிதர்களின் கண்ணுக்கு தெரியாத எதிரி. (பிசாசு என்றும் அழைக்கப்படுகிறான்)

**சிலுவை**: இது ஒரு சித்திரவதை கருவி. இயேசு தனது சொந்த விருப்பத்தில் மரித்தார்.இது இயேசுவை பின்பற்றும் அனைவருக்கும் அடையாளமாய் இருக்கிறது. (பக்.25,50).



**சீடர்கள்**: இயேசுவை பின்பற்றுகிறவர்.

**திரும்ப**: இயேசு பூமிக்கு திரும்பும் போது எல்லாமே புதிதாக இருக்கும் வானமும் பூமியும் புதுப்பிக்கப்படும். (பக்.57)



**திருவிருந்து**: இயேசுவை பின்பற்றுகின்ற மக்கள் அவரின் மரணம், உயிர்த்தெழுதலை நினைவுக்கூறும் முகமாக உட்கொள்ளும் அப்பம்,ரசம்.

**தேவதூதன்**: கண்களுக்கு தெரியாத தேவனிடம் இருந்து செய்தியைக் கொண்டுவருபவர் (பக்.5).

**தேவராஜ்யம்**: மக்கள் அவருக்கு கீழ்ப்படிகிற இடத்தில் தேவ ராஜ்யம் உண்டு.

**நித்திய ஜீவன்**: தேவ விருப்பத்தின் படி இயேசுவுடனான வாழ்க்கை. அது மரணத்தை வெல்லும் முடிவே இல்லாத வாழ்க்கை (பக்.23, 29-30 அத்துடன் 59).

**பரிசுத்த ஆவி**: இயேசுவை பின்பற்றும் மக்களுக்குள் வாழ விருப்பும் தேவனின் ஆவி.(பக்.58).

**பாவம்**: நாம் செய்யும் கடவுளின் விருப்பத்திற்க்கு எதிரான செயல் கடவுள் நமக்காக வைத்திருக்கும் இலக்கை அடைவததை தடுக்கின்றன. (பக்.4).

**மன்னிப்பு**: தேவன் மன்னிக்கிறார், ஒருவரும் அதற்கு தகுதியற்றவர்.நீங்கள் பாவம் செய்த்தற்காக உண்மையிலேயே வருந்தினால், மாற்றிக்கொள்ள விரும்பினால் மன்னிப்பு நிச்சயம். ஏனென்றால் நம் பாவத்திற்கு தகுதியான தண்டனையை இயேசு ஏற்றுக்கொண்டார்.(பக்.58).

**மேசியா**: அபிஷேகிக்கப்பட்ட ராஜா (மேசியா என்பது எபிரேய வார்த்தை) அது கிரேக்க மொழிக்கு மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது. கிறிஸ்து என (பக்.52,55).

**விசுவாசம்**: தேவன் வாக்குறுதியளித்ததைச் செய்வார் என்று நீங்கள் நம்புதல். (பக்.58).

**வேதாகமம்**: தேவன் மக்களை எப்படி பார்க்கிறார் அவர்களுடன் எவ்வாறு நடந்துகொள்கிறார் என்பதை நீங்கள் வேதத்தில் படிக்க முடியும்

**ஜெபம்**: நீங்கள் கடவுளிடம் அமைதியாகவோ சத்தமாகவோ பேசுதல். (பக்.18,19,42).



## யார் இயேசு கிறிஸ்து?


இயேசு சுமார் 2000 வருடங்களுக்கு முன் இஸ்ரேலில் வாழ்ந்தார். நாம் அவரை இயேசு, மேசியா என்கிறோம் அல்லது இயேசு கிறிஸ்து என்று அழைக்கிறோம். அவர் ராஜா எனப்படுகிறார். இயேசு கடவுளின் குமாரன் என்றும் மனுஷ குமாரன் என்றும் அழைக்கப்படுகிறார். அவர் கடவுளுக்கும் மனிதர்களுக்கும் உரியவர் என்பது அதன் பொருள் இயேசுவின் வாழ்க்கை வரலாறு வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது ஒரு மிகப் பெரிய கதை.

## இயேசுவின் நேரம்

நமது சகாப்தம் இயேசுவின் பிறப்பிலிருந்து தொடங்குகிறது. அக் காலத்தில் மக்கள் கால்நடையாகவோ அல்லது கழுதை, குதிரை, ஒட்டகத்தினூடாக பயணித்தனர். ஐரோப்பாவின் முக்கிய பகுதிகளான மத்திய கிழக்கு மற்றும் ஆப்பிரிக்கா ஆகியவை ரோமானிய பேரரசால் ஆக்கிரமிக்கப்பட்டன. பெரும்பாலான மக்கள் படிக்கவோ எழுதவோ தெரியாதிருந்தனர்.ஆனால் யூத மக்கள், புத்தகத்தின் மக்கள் என அழைக்கப்பட்டனர்.

தேவன் வேதத்தின் மூலம் மக்களிடம் பேசுகிறார். அவர் முழு உலகத்தையும் படைத்தார். அவர் எல்லா மக்களையுமே நேசிக்கிறார் என்பதை மிக தெளிவாக காட்டினார்!






# இயேசுவின் காலத்தில் இஸ்ரவேல்

**தலைநகர்**: எருசலேம்

**மாகாணங்கள்**: கலிலேயா, சமாரியா,யூதேயா.

அளவு தோராயமாக 28,000 கி.மீ 2 (10,810 ச.அ. மைல்கள்).


**காலநிலை**: வெப்பமண்டலம்

**அரசியல்**: கி.மு 63ல் ரோமானியர் இஸ்ரயேலின் கட்டுப்பாட்டில் இருந்தனர்.

**அரசாங்கம்**: பொன்டியஸ் பிலாத்து ரோமானிய கவர்னர் இஸ்ரயேலை ஆட்சி செய்தார். ரோமானிய பேரரசர் டைபீரியஸ் பிலாத்தை ஆட்சி செய்தார்.

**சமயம்**: யூத மதம். எருசலேமில் யூதர்களுக்கு ஆலயம் இருந்தது. மதத்திற்காக எல்லா வேலைகளையும் செய்வதற்க்கு பாதிரியர்கள் இருந்தனர். வேதத்தில் உள்ளதை கற்றுக்கொடுக்க போதகர்கள், பரிசேயர்கள் இருந்தனர்.


**மொழிகள்**: எபிரேய( யூதர்களின் மொழி), கிரேக்கம்(உலகமெங்கும் பேசப்பட்ட மொழி), லத்தின்( ரோமர்களின் மொழி).





ஏன் அனைத்து மக்களும் நதிக்கரையில் ஒன்றுக்கூடுகின்றனர்?



உங்களை ஆயத்தப்படுத்துங்கள் கடவுள் புதிதாக எதாவது செய்வார்!



புதிய வாழ்க்கையை ஆரம்பி!
இப்பொழுதே கோடரியானது மரங்களின் வேர் அருகே வைக்கப்பட்டுள்ளது.ஆகையால் கடவுளின் நியாயத்தீர்ப்பிற்கு உன்னால் தப்பிக்கமுடியாது.
நல்ல கனிகொடாத ஒவ்வொரு மரமும் வெட்டப்பட்டடு அக்கினியில் போடப்படும்.
இதைக் கேள்.நாம் போதுமான அளவு நல்லவர்கள் இல்லையா?
கடவுளின் நியாயத்தீர்ப்பிலிருந்து ஒருவராலும் தப்ப முடியாது. ஆனால் எனக்கு பின் வருகிறவர் உங்களை உள்ளே இருந்து மாற்றி,காப்பாற்றுவார்
உங்கள் வாழ்க்கை நிச்சயமாய் வித்தியாசமாக மாற வேண்டுமா? ஞானஸ்நானம் பெற இந்த தண்ணீருக்குள் வாருங்கள்.
இப்பொழுது நீங்கள் உங்கள் பாவங்களில் இருந்து சுத்தப்படுத்தப்பட்டு புதிய வாழ்க்கையைத் தொடங்குகிறீர்கள்.


நதியிலிருந்த பிரசங்கியை மக்கள் அனைவரும் யோவான்ஸ்நானகன் என்று அழைத்தனர்.
நான் அல்ல முக்கியமானவர் என்னைப் பார்க்கிலும் மிகவும் வல்லமையுடைய ஒருவர் வருகிறார். அவருக்கு வழியை ஆயத்தப்படுத்துகிறேன்.அவர் உங்களுக்கு கடவுள் யார் என்பதைக் காண்பிப்பார்.அவரே உங்களுக்குப் பரிசுத்த ஆவியானவராலும் நெருப்பினாலும் ஞானஸ்நானம் கொடுப்பார். அது உங்களை முழுமையாய் மாற்றும்.
பின்னர்...
நான் உம்மிடம் ஞானஸ்நானம் பெறவேண்டி இருக்க! நீர் என்னிடம் வருகிறீரா?
இப்பொழுது இப்படியே இருக்கட்டும். கடவுள் விரும்புவதையே செய்வோம்.
தந்தையே உமது அரசு வருவதாக.உமது திட்டம் பரலோகத்தில் நிறைவேறுவது போல் பூமியிலும்நிறைவேறு வதாக.
திடீரென வானத்தில் இருந்து ஒரு சத்தம் கேட்டது.
ஆம்! நீ என்னுடைய பிரியமான மகன் நான் உன்மீது அன்பாய் இருக்கிறேன்.



யோவான்ஸ்நானகன் இஸ்ரவேல் மக்களை மேசியாவின் வருகைக்காக ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தார். அந்த நேரத்தில் ரோமானியர்கள் உலகின் மிக பெரிய பகுதியை ஆண்டனர். ரோமானிய பேரரசின் ஒரு சிறிய பகுதிதான் இஸ்ரவேல்.
கப்பர்நகூம்
நாசரேத்து
கானான்
கலிலேயா
யோர்தான்
எருசலேம்
யூதேயா
இஸ்ரவேல்
யூத மக்கள் மேசியாவின் வருகைக்காக காத்திருப்பார்கள். அவர் இஸ்ரவேலுக்கே பெரியவராகுவார் என அவர்களின் பழைய புத்தகங்களில் தீர்க்கத்தரிசனமாக அவரது வருகை குறிப்பிடப்பட்டுள் ளது.
யோவான்ஸ்நானகன் யோர்தான் நதியில் வைத்து பலியாகும் ஆட்டுக்குட்டியாக இயேசுவை சுட்டிக்காட்டினார்.
இதோ! பாருங்கள் உலகின் பாவத்தை போக்க வந்த தேவ ஆட்டுக்குட்டி இவரே!
பரிசுத்த ஆவியானவர் இயேசுவை பாலைவனத்திற்கு அழைத்துச் சென்றார்.
இயேசு கிறிஸ்து தன்னை தயார் படுத்துவதற்காக நாற்பது நாட்கள் இரவு பகலும் உபவாசித்து ஜெபித்தார்.
இயேசு கடவுளின் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்.மக்களை தண்டனை மற்றும் மரண பயத்திலிருந்து விடுவிப்பதே தேவ விருப்பம்.
மனுக்குலத்தை வெறுப்பு,நோய்,மரணத்துடன் ஆட்சி செய்த இருளின் அதிகாரியான சாத்தானை இயேசு எதிர்க்கொள்கிறார்.
ஆம் தகப்பனே! நீர் விரும்புவதையே நான் செய்ய வேண்டும்.


ஆனால் சாத்தான் இயேசுவின் மனதின் எண்ணங்களை வைத்து கடவுளின் பணியிலிருந்து இழுக்க திட்டமிட்டான்.
நீர் தேவனுடைய குமாரனானால் இந்த கற்களை அப்பமாக்கும்.
மனிதன் அப்பத்தினால் மட்டுமல்ல தேவனுடைய வாயிலிருந்து வரும் ஒவ்வொரு வார்த்தையினாலும் வாழ்வான்.
நீர் தேவனுடைய குமாரனானால் ஆலயத்தின் உயரமான முனையிலிருந்து கீழே குதியும்.அப்போழுது அவர் தனது தூதர்களுக்கு கட்டளையிடுவார் அவர்கள் உம்மை ஏந்திக்கொள்ளுவார்கள்.
உன் தேவனாகிய கர்த்தரை பரீட்சைக்குட்படுத் தாதே என்று எழுதியிருக்கிறதே.
மீண்டும் அவன் உலகத்தின் அரசுகள் எல்லாவற்றையும் காட்டி நீர் என்னை விழுந்து வணங்கினால் இவை எல்லாவற்றையும் நான் தருவேன் என்றான்
சாத்தானே என்னை விட்டு அப்பாலே போ! 'தேவனாகிய உன் கர்த்தரை வழிபட்டு, அவருக்கு மட்டுமே பணி செய்' என்றும் எழுதியிருக்கிறதே என்றார்.
அப்பொழுது சாத்தான் அவரை விட்டுச் சென்றான். தூதர்கள் வந்து அவருக்குப் பணி செய்தார்கள்.
பரிசுத்த ஆவியானவரின் வல்லமையுடன் இயேசு கலிலேயாவுக்குத் திரும்பிப்போனார்.மக்கள் அவருக்குப் பின் சென்றனர்.ஆவலான மக்கள் இயேசுவை மேசியா என்றனர்.


கலிலேயாவிலுள்ள கானா என்ற ஊரில் ஒரு திருமணம் நடைபெற்றது.
இயேசு தனது தாய், நண்பர்களுடன் திருமணத்திற்க்கு அழைக்கப்பட்டிருந்தார்.


ஆனால் திருமணத்தின் பாதியில்...
என்ன ஒரு விபத்து! திராட்சை இரசம் தீர்ந்துப்போய் விட்டது!
இயேசு சொல்வதை மட்டும் செய்யுங்கள்.
அந்த பெரிய கற்சாடிகளில் தண்ணீர் நிரப்பி விருந்தை நடத்த பொறுப்பாய் இருப்பவரிடம் சுவைக்கும்படி கொடுங்கள் என்றார்.
?
தண்ணீரா? ஆனால் இது திராட்சை இரசமே! அதுவும் சிறந்த திராட்சைரசம்.
சுவைத்துப்பாருங்கள்! நீரோ சிறந்த திராட்சைரசத்தை இவ்வளவு நேரமாய் கொடுக்காமல் வைத்திருந்திருக்கிறீரே
என்ன ஒரு கொண்டாட்டம்! என்ன ஒரு திருமணம் தண்ணீர் சிறப்பான திராட்சை இரசமாய் மாறியது!
நசரயனாகிய இயேசுவே அதைச் செய்தார்.
அவர் யார்?


கப்பர்நகூம் என்பது கலிலேயா ஏரிக்கரையிலுள்ள ஒரு வளமான மீன் பிடி கிராமமாகும். இங்கே இயேசு கடவுளின் திட்டங்களைப்பற்றி பேசத் தொடங்கினார்.
அங்கு அவரது முதல் சீசரை தெரிவு செய்தார்.
சீமோனிடம்,'படகைத் தண்ணீருக்குள் ஆழமான பகுதிக்குக் கொண்டுபோய், மீன்களைப் பிடிக்கும்படி உன் வலைகளைப் போடு' என்றார்.
ஐயா, இரவு முழுவதும் நாங்கள் கஷ்டப்பட்டோம், ஒன்றுமே பிடிபடவில்லை.
'ஆனால் நீர் இப்படிச் சொல்வதனால், நான் வலைகளைப் போடுகிறேன்'
என்ன! என்னால் நம்ப முடியவில்லை!


யாக்கோபு! யோவான்! வலைகள் கிழியத் தொடங்கின. வந்து உதவுங்கள்.
கர்த்தாவே என்னை விட்டுப் போய்விடும் நான் ஒரு பாவம் நிறைந்த மனிதன்!'
அப்பொழுது இயேசு சீமோனிடம்,பயப்ப டாதே!
'நீ இப்பொழுது தொடக்கம் மனிதர்களைப் பிடிப்பவனாவாய்'
என்னைப் பின் தொடர்ந்து வா!



இயேசு தம்முடைய சீடர்களுடன் இஸ்ரவேலின் வடப்பகுதி வழியாகப் பயணம் செய்கிறார். கடவுளின் இராச்சியம் வரப் போகிறது என்று எல்லோரிடமும் சொல்கிறார். அவருடைய வார்த்தைகள் வல்லமையும், மகிமையும் நிறைந்தவை. அவர் நோயுற்றவர்களை குணப்படுத்துகிறார், மற்றும் பேய் பிடியிலிருந்து மக்களை விடுவிக்கிறார். பலர் அவரைப் பின்பற்றுகிறார்கள், அந்த மக்கள் மற்ற மாகணங்களில் இருந்தும் இஸ்ரவேலின் தலைநகரான எருசலேமிலிருந்தும் வருகிறார்கள்.
ஏழைகளாய் இருக்கிற நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். ஏனெனில் தேவ அரசு உங்களுக்கே உரியது.
இப்பொழுது பசியாய் இருக்கிற நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் ஏனெனில் நீங்கள் திருப்தியாக்கப்படுவீர்கள்.
இப்பொழுது அழுகிறவர்களாகிய நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். ஏனெனில் நீங்கள் சிரிப்பீர்கள்.
என்னிமித்தமாய் தீமையானவர்கள் என்று மக்கள் தள்ளிவிடும் போது நீங்கள் ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.அந் நாளிலே சந்தோஷப்பட்டு மகிழ்ச்சியுடன் துள்ளிக் குதியுங்கள்.ஏனெனில் பரலோகத்தில் கிடைக்கப்போகும் வெகுமதி பெரியது.


மற்றவர்கள் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்களோ,அதையே நீங்களும் மற்றவர்களுக்குச் செய்யுங்கள்.
உங்கள் பகைவரில் அன்பாயிருங்கள்.அவர்களை ஆசீர்வதித்து ஜெபம் பண்ணுங்கள்.
'நற்செயல்களை' மனிதர் முன் அவர்கள் காண வேண்டுமென்று செய்யாதபடி கவனமாய் இருங்கள்.
யாராவது ஒருவன் ஒரு பெண்ணை காம இச்சையுடன் பார்த்தால், அவன் அவளுடன் அப்போதே தன் இருதயத்தில் விபசாரம் செய்தவனாகிறான்.
உன்னுடைய கண்ணே உன் உடலின் விளக்காய் இருக்கிறது. உனது கண்கள் நல்லதாய் இருக்கும்போது, உன் முழு உடலும் வெளிச்சம் நிறைந்ததாய் இருக்கும்.ஆனால் அவை கெட்டதாய் இருந்தால், உன் உடலும் இருள் நிறைந்ததாய் இருக்கும்.
ஒருவனும் இரண்டு எஜமான்களுக்கு பணி செய்ய முடியாது.அப்படியே நீங்கள் இறைவனுக்கும் பணத்துக்கும் பணிசெய்ய முடியாது'
முதலாவதாக அவருடைய அரசையும், அவரது நேர்மையையும் தேடுங்கள்.அப்பொழுது இவைகளும் அவற்றுடன் உங்களுக்குக் கொடுக்கப்படும்;.நாளைக்கு என்ன நடக்கும் என்று கவலைகொள்ள வேண்டாம்.
என்னிடம் வந்து என் வார்த்தையை கேட்டு அவற்றைச் செயற்படுத்துகிறவன்,கற்பாறையிலே ஆழமாய் தோண்டி,அதில் அத்திவாரமிட்டு வீடு கட்டுகிற ஒரு மனிதனுக்கு ஒப்பாயிருக்கிறான்.என் வார்த்தையின் படி நடவாதவனோ,அத்திவாரமின்றி நிலத்திலே வீட்டைக் கட்டிய மனிதனைப்போல் இருக்கிறான்.
11.


சில நாட்களின் பின் இயேசு கப்பர்நகூமுக்குச் சென்ற போது, அவர் வீட்டில் இருக்கிறார் என அறிந்து மக்கள் திரளாய் கூடிவந்தனர்.
நாங்கள் ஒரு காலமும் கடந்து செல்லமாட்டோம்.
அது கூரையாக இருக்க வேண்டும். மெத்தை மற்றும் அனைத்தும்.
அங்கு என்ன நடக்கிறது?
அவரை விடுங்கள்! அந்த நண்பர்களுக்கு அதிக விசுவாசம் உண்டு.
உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது!
உங்களுக்கு அது கேட்டதா? அப்படிச் சொல்ல எவ்வளவு தைரியம்!
தேவனை நிந்தித்து பேசுகிறார்!
தேவனால் மட்டுமே பாவங்களை மன்னிக்க முடியும்.
அவர்கள் யோசிக்கிறதை அவர் அறிந்து: சொல்வதற்கு எது இலகு உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்று சொல்வதோ?, அல்லது எழுந்து நட என்று சொல்வதோ?
பூமியிலே பாவங்களை மன்னிக்கிறதற்கு மனுமகனுக்கு அதிகாரம் உண்டு என்பதை நீங்கள் அறிய வேண்டும் 'நான் உனக்கு சொல்லுகிறேன், உன் படுக்கையை எடுத்துக்கொண்டு உன் வீட்டுக்குப் போ'!




இயேசு பல நல்ல காரியங்களைச் செய்தார். மேலும் அவர் ஞானத்துடனும் அதிகாரத்துடனும் பேசினார். அவர் கருணை இரக்கத்தைத் தவிர வேறு எதையும் வெளிப்படுத்தவில்லை. ஆனால் அனைவரும் இயேசுவைக் குறித்து சந்தோசப்படவில்லை. ஆகையால் மதத்தலைவர்கள் சட்டத்தை நிலைநாட்ட வேண்டும். இயேசு ஓய்வு நாளுக்கான விதிகளைக் கடைப்பிடிக்கிறாரா? என பார்த்தனர்..ஓய்வு நாளைப்போல வாரத்தின் முதல் நாள் எந்த வேலையும் செய்ய தடை விதிக்கப்பட்டிருந்தது.
















இயேசுவுக்கும் தலைவர்களுக்கும் இடையே பதற்றம் எழும் போது. இயேசு அவ்விடம் விட்டு விலகிப்போனார்.அவர் தமது சீடருடன் படகில் ஏறிச்சென்றார்.
அப்போது சீடர் இயேசுவிடம் போய் அவரை எழுப்பி, 'ஐயா! ஐயா! நாங்கள் அமிழ்ந்து போகிறோம்.'
நீங்கள் ஏன் இவ்வளவாய்ப் பயப்பட்டீர்கள்? உங்கள் விசுவாசம் எங்கே?


காற்றைக் கடிந்துகொண்டார். அலைகளைப் பார்த்து 'அமைதலாயிரு! இரையாதே' என்றார். அப்பொழுது காற்றுத் தணிந்து பெரும் அமைதல் உண்டாயிற்று.
அவர்கள் கடலை கடந்து தங்களது படகுகளை கரையில் கட்டிக்கொண்டிருந்தார்கள் அப்பொழுது மலையில் இருந்து ஒரு சத்தம் கேட்டது.
போதகரே!


அந்த பட்டணத்தில் இருந்து பேய் பிடித்த ஒருவன் இருந்தான். நீண்டகாலமாக இந்த மனிதன் உடைகள் உடுத்தாதவனும் வீட்டில் வாழாதவனுமாய் இருந்தான்.
அவன்! அச்சசசோ! என கூச்சலிட்டான்.
அவன் அவருக்கு எதிர்ப்பட்டான்.
அவன் அவரிடம் 'இயேசுவே, மகா உன்னதமானவரின் மகனே, என்னை துன்புறுத்த வேண்டாம்' என உரத்த சத்தமிட்டான்.
உன்னதமான வரின் மகனே உமக்கும் எங்களுக்கும் என்ன சம்பந்தம்?
அவனை விட்டு வெளியே வரும்படி இயேசு அந்த தீய ஆவிக்கு கட்டளையிட்டார்!
உன் பெயர் என்ன?
'லேகியோன்', ஏனெனில் பல பேய்கள் அவனுக்குள் புகுந்திருந்தன.
அந்த பேய்கள் தங்களை பன்றிகளுக்குள்ளே போகும்படி கட்டளையிடுமாறு கெஞ்சி கேட்டன.
கடந்து போ!


?
நான் முற்றிலும் குணமாகிவிட்டேன்!
மக்கள் எல்லாரும் தங்களை விட்டு போகும்படி வேண்டிக் கொண்டார்கள்.
நானும் உங்களோடே வருகிறேன்?
வேண்டாம் நீ உன் வீட்டுக்குப் போய் தேவன் உனக்கு எவ்வளவாய் செய்திருக்கிறார் என்று சொல்.


நான் என்னுடைய விருப்பத்தைச் செய்வதற்காக அல்ல, என்னை அனுப்பினவருடைய திட்டத்தைச் செய்வதற்காகவே வந்திருக்கின்றேன்.
இயேசு எப்பொழுதும் தனிமையான இடத்திற்க்கு போய் ஜெபித்தார்.
ஒரு இரவு ஜெபத்திற்கு பின் இயேசு தனது 12 அப்போஸ்தலரை தெரிவு செய்தார்.அவர்களுக்கு பிசாசுகளையெல்லாம் துரத்தவும், நோய்களைக் குணமாக்கவும் வல்லமையும் அதிகாரமும் கொடுத்தார். அவர் அவர்களை இருவர் இருவராக வெளியே அனுப்பினார்.
பேதுருவும் அவன் சகோதரன் அந்திரேயா...
யாக்கோபு அவன் சகோதரன் யோவானும்...
பிலிப்பு, பர்த்தொலொமேயு...


தோமா, (வரி அறவிடுபவனான) மத்தேயு...
யாக்கோபு மற்றும் லெபேயு...
தீவிரவாதியான சீமோன் மற்றும் யூதாஸ் காரியோத்து ஆகியோர்.
போங்கள்! உங்களை ஏற்றுக்கொள்கிறவன் என்னையும் ஏற்றுக்கொள்கிறான், என்னை ஏற்றுக்கொள்கிறவன் என்னை அனுப்பியவரையும் ஏற்றுக்கொள்கிறான்.
12 அப்போஸ்தலர்களும் தங்களது பணியிலிருந்து உற்சாகமாய் திரும்பினார்கள். இயேசு சொன்னதையெல்லாம் செய்தார்கள். அதன் பின் இயேசு அவர்களுடன் அமைதியாக போக நினைத்தார் ஆயினும் கூட்டம் அவரை விடவில்லை.
அப்பொழுது அவர் தனது சீடர்களிடம், 'அறுவடை அதிகமாயிருக்கிறது, வேலையாட்களோ கொஞ்சமாய் இருக்கிறார்கள். ஆகையால் அறுவடையின் கர்த்தரிடம் தமது அறுவடைக்கு வேண்டிய வேலையாட்களை அனுப்பும் படி ஜெபம்பண்ணுங்கள்' என்றார்.


இயேசு தொடர்ந்து தேவ அரசைப்பற்றி பேசி, சுகம் தேவைப்பட்டோரைச் சுகமாக்கினார். அப்பொழுது மாலைவேளையானது.
பிலிப்பு, இந்த மக்கள் எப்படி உணவு பெற்றுக் கொள்வார்கள்? 'நீங்கள் அவர்களுக்கு ஏதாவது சாப்பிடக் கொடுங்கள்'
ஒரு கைப்பிடி அளவு உணவு கொடுப்பதற்கு, எட்டு மாத சம்பளத்திற்கு உணவு வாங்கினாலும் போதாதே'!
இங்கே ஒரு சிறுவனிடம் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும், இரண்டு சிறு மீன்களும் இருக்கின்றன.
அவர்களை 50 பேர்கள் கொண்ட குழுக்களாக உட்கார வையுங்கள் என்றார்.
இயேசு கடவுளுக்கு நன்றி சொன்னார்...
அவர் அப்பத்தையும் மீன்களையும் துண்டுகளாக பிட்டார்.


இயேசு உணவை பெருக்கியதால் ஆயிரக்கனக்கான மக்களின் பசி தீர்க்கப்பட்டது.
அவரை பலவந்தமாய் தங்களுடைய அரசனாக்க நினைத்தார்கள்.
நிச்சயமாய் இவரே உலகத்திற்கு வரவேண்டியிருந்த இறைவாக்கினர்' என்றனர்.
கவனியுங்கள்! சாப்பிட்ட பின் 12 கூடைகள் நிறைய, அப்பத்துண்டுகள் மிகுதியாய் இருந்தன.
பின்பு இயேசு மக்கள் கூட்டத்தை அனுப்பின உடனே படகில் ஏறி ஜெபிக்கும்படி மலைப்பக்கமாய் போனார்.


அந்த இரவு.....
'தைரியமாயிருங்கள் ! நான்தான். பயப்படாதிருங்கள்'!
ஆஆஆஆ ஆ! பேய்!
ஆண்டவரே நீர்தான் என்றால், நானும் தண்ணீர்மேல் நடந்து உம்மிடம் வரும்படி சொல்லும்.
'வா!'
'கர்த்தாவே என்னைக் காப்பாற்றும்!'
நீ ஏன் சந்தேகப் பட்டாய், பேதுரு?


சிலர் இயேசுவை இராஜாவாக்க விரும்புகிறார்கள்.அவர் ரோமானிய ஆக்கிரமிப்பளர்களை விரட்டிடுவார் என அவர்கள் நம்புகிறார்கள். இயேசுவுக்கு எதிரிகள் அதிகரித்தவண்ணமே இருந்தனர்.அவர் மக்களுக்கு உதவி செய்தாலும், மதத்தலைவர்கள் அவர் சட்டத்தை மீறுவதாக நினைத்தனர்.அவர்கள் மக்களை அவருக்கு எதிராக திருப்பி அவரை விரட்ட நினைத்தனர்.
'ரபீ! எப்பொழுது நீர் இங்கே வந்தீர்?
நீங்கள் இங்கே திருப்தியாய்ச் சாப்பிட்டதனாலேயே என்னைத் தேடுகிறீர்கள்?
அழிந்துபோகும் உணவுக்காக வேலை செய்யவேண்டாம். நித்திய வாழ்வுவரை நிலைநிற்கும் உணவுக்காக வேலை செய்யுங்கள்.
நானே நித்திய வாழ்வளிக்கும் உணவு.எனது மாம்சமே இந்த உணவு. இதையே உலகத்தின் வாழ்வுக்காக நான் கொடுப்பேன்'
இந்த மனிதன் எப்படி தன் மாம்சத்தை எங்களுக்குச் சாப்பிடக் கொடுப்பான்?
போதகரே!
வாருங்கள் போகலாம்!
இவர் எல்லாரையும் ஏமாற்றுகிறார்.
நீங்களும் போய்விட விரும்புகிறீர்களா'?
கர்த்தாவே நாங்கள் யாரிடம் போவோம்? நித்திய வாழ்வின் வார்த்தைகள் உம்மிடம் அல்லவா உண்டு!


இயேசுவுக்கு எதிரான எதிர்ப்பு தொடர்ந்து அதிகரித்தது. அவர் கலிலேயாவை விட்டு வெளியேறினார். இஸ்ரவேலின் பிற பகுதிகளில் தன்னைப் பின்பற்றும் ஆண்,பெண்,குழுக்களுடன் பணியை ஆரம்பித்தார்.
கலிலேயா
எருசலேம்
இஸ்ரவேல்
பின்னர் அவர் எருசலேமுக்குப் புறப்பட்டார்...
'மக்கள் என்னை யார் என்று சொல்லுகிறார்கள்?'
அவர்கள் நினைக்கிறார்கள் நீர் ஒரு தீர்க்கதரிசி என.
பிரயாணத்தின் போது...
'நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?
நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்?'
நீரே மேசியா, ஜீவனுள்ள தேவனுடைய குமாரன்!
'தம்மைக் குறித்து வேறு யாருக்கும் சொல்ல வேண்டாம்.' மேசியா அநேக பாடுகள் பட எருசலேமுக்கு போக வேண்டும். அத்துடன் தாம் கொல்லப்பட வேண்டும், மூன்று நாட்களின் பின் உயிருடன் எழுந்திருப்பார் என்றும் சொன்னார்.


எருசலேம் நகருக்கு வெளியே மக்கள் அடிக்கடி கொல்லப்பட்டார்கள்.சிலுவையில் அறையப்பட்டார்கள், இது ரோமானியர்களின் கொடூரமான மரண தண்டனை முறையாகும்.
எவனாவது என்னைப் பின்பற்றி வரவிரும்பினால், அவன் தன்னை வெறுத்து, தனது சிலுவையை எடுத்துக் கொண்டு என்னை பின்பற்ற வேண்டும்.
தன்னுடைய உயிரைக் காத்துக்கொள்ள விரும்புகிறவன் எவனும், அதை இழந்து விடுவான். என்னிமித்தம் தன் உயிரை இழந்து விடுகிறவனோ, அதைக் காத்துக்கொள்வான்.
நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்.
'உன் தேவனாகிய கர்த்தரில் உன் முழு இருதயத்துடனும், உன் முழு ஆத்துமாவுடனும், உன் முழு மனதுடனும், உன் முழு பெலத்துடனும் அன்பு செலுத்து', நீ உன்னில் அன்பு செலுத்துவது போலவே உன் அயலானிடத்திலும் அன்பு செலுத்து!


இஸ்ரவேலில் தோல் நோய் (குஷ்டரோகம்) உள்ள மக்கள் இருந்தனர்.
அவர்கள் அசுத்தமானவர்கள்.இது ஒரு பயங்கரமான நோய்.
பாதிக்கப்பட்டவர்கள் ஆரோக்கியமானவர்களுடன் தொடர்பு கொள்ள முடியாது.
அவர்களை தனிமைப்படுத்தி ஒரு கிராமத்தில் வைத்திருந்தனர்.
இந்த நோய் உள்ளவர்கள் தாங்கள் வருவதை எச்சரிப்பதற்க்காக சத்தமாய் கத்த வேண்டும்.....
அசுத்தமானவர்கள்! அசுத்தமானவர்கள்!
ஐயா! இயேசுவே! எங்களுக்கு இரக்கம் காட்டும்!'


'நீங்கள் போய் மதகுருக்களிடம் உங்களை காண்பியுங்கள்!'
மதகுருக்களிடம் செல்ல வேண்டுமா? காண்பிக்க வேண்டுமா?
அப்பொழுது நாங்கள் குணமடைவோமா?
?
!
ஆம்! முழுமையாய்!
நாங்கள் சுகமடைந்தோம்!
வாருங்கள்!
அல்லேலுயா! கர்த்தர் நல்லவர்! நன்றி!
'பத்து பேரும் சுகமடையவில்லையா? மற்ற ஒன்பதுபேரும் தேவனுக்கு நன்றி செலுத்த வரவில்லையா?
"எழுந்து போ! உன் நம்பிக்கை உன்னை சுகப்படுத்தியது மட்டுமல்ல, உன்னை காப்பாற்றியது.



எருசலேமில் உள்ள யூத தலைவர்கள் இயேசு பயணம் செய்யும் போது அவரை உளவு பார்க்கும்படி தங்கள் ஊழியர்களை அனுப்பினார்கள். அவரின் செயல்களை அவர்கள் முற்றிலும் வெறுத்தார்கள்...
இயேசு விபச்சாரிகள், ரோமானியர்களைக் கையாளும் வரி அறவிடும் அதிகாரிகள் போன்ற கெட்ட பெயர் கொண்டவர்களுடன் அவர் தொடர்பு கொண்டார்.
வழி தவறிப் போனவர்களைத் தேடி இரட்சிப்பதற்காகவே மேசியா பூமிக்கு வந்திருக்கிறார்.
உண்மையில் யாருக்கும் வேலை செய்ய அனுமதிக்கப்படாத ஓய்வு நாளில் இயேசு நோயுற்றவர்களை சுகமாக்கினார்....
குணமடையுங்கள்!
சிறு பிள்ளைகள் மீது அவர் விஷேட கவனம் செலுத்தினார்.
சிறு பிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள் அவர்களை தடுக்க வேண்டாம் ஏனென்றால் தேவ அரசு இப்படிப்பட்டவர்களுக்குரியது.



எருசலேமுக்கு அருகில் உள்ள பெத்தானியா என்ற கிராமத்திற்க்கு இயேசு அழைக்கப்பட்டிருந்தார். லாசரு நோய்வாய்ப்பட்டு மரித்து போய் இருந்தார்.லாசருவும் அவன் சகோதரிகளான மார்த்தாளும், மரியாளும் இயேசுவின் நண்பர்கள்.இயேசு கிராமத்திற்கு சென்ற போது லாசரு நான்கு நாட்களுக்கு முன் அடக்கம் செய்யப்பட்டார் என கேள்விப்பட்டார்...
'கர்த்தாவே!'
நீர் இங்கே இருந்திருந்தால், என் சகோதரன் இறந்திருக்க மாட்டான்!
மார்த்தாளே, 'உன்னுடைய சகோதரன் திரும்பவும் உயிருடன் எழுந்திருப்பான்'.
ஆம், எனக்கு தெரியும்.'கடைசி நாளில் நடைபெறும் உயிர்த்தெழுதலில் அவன் உயிரோடு எழுந்திருப்பான்'
உயிர்த்தெழுதலும்,வாழ்வும் நானே.என்னில் விசுவாசமாயிருக்கிறவன், இறந்தாலும் வாழ்வான். நீ இதை விசுவாசிக்கிறாயா மார்த்தாள்?
ஆம் கர்த்தாவே! நீர் தேவனின் மகன். உலகத்திற்கு வர வேண்டிய மேசியா இதை நான் விசுவாசிக்கின்றேன்.
அவனை எங்கே கிடத்தி வைத்திருக்கின்றீர்கள்?
"கர்த்தாவே! வாரும், வந்து பாரும்".




பாருங்கள், இவர் அவனில் எவ்வளவு அன்பாயிருந்தார்!.'
இவர் இவனை சாகாமல் காத்திருக் கலாமே?
இறந்தவர்கள் துணியால் சுற்றப்பட்டு கல்லறைகளில் கிடத்தப்பட்டுள்ளனர்.
கல்லை அகற்றுங்கள்!
கர்த்தாவே, இப்பொழுது அது நாற்றம் வீசுமே. அங்கே அவனை வைத்து நான்கு நாட்கள் ஆயிற்றே.....
நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையை காண்பாய்.
பிதாவே, நீரே என்னை அனுப்பினீர் என்பதை இங்கு நிற்கிற மக்கள் விசுவாசிப்பதற்க்காக இதை செய்கிறேன்.
'லாசருவே, வெளியே வா!'
'அவன் கட்டியிருக்கும் சாவு துணிகளை அவிழ்த்து விடுங்கள் அவன் போகட்டும்'


எருசலேமின் தலைவர்கள் இயேசு மற்றும் அவரை பின்பற்றுபவர்களைக் குறித்துது அதிக கவனம் செலுத்தினர்....
இதோ இந்த மனிதன் பல அற்புத அடையாளங்களை செய்கிறானே.
நாம் இப்படியே இவனைப் போகவிட்டால். ரோமானியர்கள் நடவடிக்கை எடுப்பார்கள்!
ரோமர்கள் வந்து நமது இனத்தையும் நமது ஆலயத்தையும் அழித்துப்போடுவார்களே.
சற்று சிந்தியுங்கள்! நமது முழு இனமும் அழிவதைப் பார்க்கிலும், நம் மக்களுக்காக ஒருவன் சாவது நல்லது.
எனவே இந்த இயேசு கொல்லப்பட வேண்டும்!
எல்லா மனிதர்களுக்காகவும் ஒரு மனிதன் இறக்க வேண்டும்!ஆகையால் தான் யூதத் தலைவர்கள் இயேசுவை பிடிக்கும்படி சந்தர்ப்பத்தை தேடினர்.அவர் எருசலேம் நோக்கி சென்றார்.அது யூத தலைவர்களுக்கு வசதியானது. ரோமர் இயேசுவுக்கு மரண தண்டனை விதிக்க வேண்டும் என விரும்பினார்கள்...


இதற்கிடையில் இயேசு பெத்தானியாவுக்கு சென்றார்...
மரியாள்!
என்ன விரயம்! அந்த வாசணைத் தைலம் பெறுமதிமிக்கது.
நாங்கள் அதை விற்று அந்த பணத்தை ஏழைகளுக்கு கொடுத்திருக்க லாம்.
அவளை விடு யூதாஸ். அவள் என் உடலை அடக்கம் செய்ய தயார் செய்கிறாள்.


பஸ்கா பண்டிகை நெருங்கியதால் திரளான மக்கள் எருசலேமுக்கு
பயணம் செய்தனர்.அந்நேரத்தில் ஆலயத்திற்க்கு பலி கொடுப்பார்கள்....


தலைவர்கள் கைது
செய்ய காத்திருப்பதை
பொருட்படுத்தாமல்.
இயேசு எருசலேமுக்கு
செல்கிறார்.


மக்கள் ஆரவாரம் செய்து அவரை வரவேற்றனர்....
வேகமாய்!
ஓசான்னா!
கர்த்தருடைய பெயரால் வருகிறவர் ஆசீர்வதிக்கப் பட்டவர்.!
இஸ்ரயேலின் கர்த்தர் ஆசீர்வதிக்கப்பட்டவர்!
எருசலேமே உங்களுக்கு சமாதானத்தைத் தரக்கூடியதை இன்றைக்காவது நீங்கள் அறிந்திருக்க கூடாதா? ஆனால் அதை நீங்கள் விரும்பவில்லை.
அவர் இதை நிறுத்த வேண்டும்!
முழு உலகமே அவருக்கு பின்னால் செல்கிறது.



தலைநகரில் உள்ள தேவாலயமே யூதர்களின் வழிபாட்டின் மையமாய் இருந்தது...
பஸ்கா பண்டிகையின் போது ஆட்டுக்குட்டிகள் வெட்டப்படுகின்றது....
ஆட்டுக்குட்டிகளை தேவாலயத்தில் காணிக்கையாக பலியிடுவதன் மூலம் தங்கள் பாவத்திலிருந்து விடுபடுகிறார்கள்.
ஆனால் பலியாகும் எந்த ஆட்டுக்குட்டி உண்மையில் மக்களை தங்களின் பாவத்திலிருந்து விடுவிக்கிறது?
தேவாலய முற்றத்தில் மக்கள் வியாபாரம், மற்றும் பணம் மாற்றுவதில் மும்முரமாக உள்ளனர்....
திடிரென இயேசு அங்கு சென்றார்....


“என் வீடு ஒரு ஜெப வீடாய் இருக்கும் என்று எழுதியிருக்கிறதே, ஆனால் நீங்கள் அதைக் கள்வர் குகை ஆக்கியிருக்கிறீர்கள்”.
அவர் பயங்கரமானவர்! எல்லா மக்களும் அவருடைய வார்த்தையை ஆழ்ந்து கேட்டுக்கொண்டிருந்தார்கள்.
அவரை ஒழிக்க ஒரு நல்ல தருணத்தை நாம் கண்டுப்பிடிக்க வேண்டும்.



நாங்கள் ஏதாவது தந்திரமான முறையில் இயேசுவைக் கைதுசெய்து கொலை செய்ய வேண்டும் என சூழ்ச்சி செய்தார்கள்.
பண்டிகைக் காலத்தில் அப்படி செய்யக் கூடாது, அப்படி செய்தால் ஒரு கிளர்ச்சி ஏற்படலாம்.
இயேசுவை உங்களிடம் ஒப்புக்கொடுத்தால் நீங்கள் என்ன கொடுப்பீர்கள்?
இந்த யூதாசும் அவரின் ஒரு சீடன்.
நான் இயேசுவை உங்களுக்கு காட்டிக்கொடுக்கிறேன்.
இயேசுவுக்காக முப்பது வெள்ளிக்காசுகளைத் தருகிறோம்.அது ஒரு அடிமையின் விலை.

பஸ்கா பண்டிகைக்கு முந்தய நாட்களில் இயேசு தேவாலயத்தில் மக்களிடம் பேசினார். எருசலேம் வீழ்ச்சியடையும் என அவர் கணித்தார்.எல்லோரும் தப்பி ஓட வேண்டும். பிறகு இயேசு பேதுருவிடமும், யோவானிடமும் நீங்கள் போய் நாங்கள் பஸ்காவைச் சாப்பிடுவதற்க்கான ஆயத்தங்களைச் செய்யுங்கள் என்றார்...














நான் வேதனை அனுபவிக்கும் முன்னதாக உங்களுடனே இந்தப் பஸ்காவைச் சாப்பிடுவதற்கு ஆவலுடன் இருக்கிறேன்.
அதிகாரத்தில் உள்ளவர்கள் வேலை செய்பவர்களை அடக்கி ஆளுகிறார்கள்,ஆனால் நீங்கள் அப்படி இருக்க கூடாது.
உங்கள் மத்தியில் எவன் பெரியவனாக விரும்புகிறானோ அவன் உங்களுக்கு பணி செய்கிறவனாக இருக்க வேண்டும்.
நான் உங்கள் மத்தியில் பணிச் செய்கிறவனாக இருக்கின்றேன்.


'கர்த்தாவே, நீர் என் கால்களைக் கழுவப் போகிறீரா!? ஒரு அடிமைப் போல, இல்லை! நீர் ஒருப்போதும் என் கால்களைக் கழுவக் கூடாது!
நான் உன்னைக் கழுவாவிட்டால், என்னுடன் உனக்கு ஒரு பங்கும் கிடையாது.
'கர்த்தாவே, அப்படியானால் என் கால்களை மாத்திரமல்ல, என்னுடைய கைகளையும் என்னுடைய தலையையும்கூட கழுவும்!'
குழித்தவன் தன் கால்களை மாத்திரமே கழுவ வேண்டியவனாய் இருக்கிறான்.
நீங்கள் என்னை 'போதகர்' என்றும் 'கர்த்தர்' என்றும் அழைக்கிறீர்கள், அப்படி அழைப்பது சரிதான்.நான் உங்கள் கால்களைக் கழுவியது போல் நீங்களும் ஒருவருக்கொருவர் சேவைச் செய்யுங்கள்.
'நான் உங்களுக்கு உண்மையைச் சொல்கிறேன், உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுக்கப் போகிறான்.'
நிச்சயமாக நான் இல்லை அல்லவா?
இல்லை!
யூதாஸ் நீ செய்யப் போகிறதை சீக்கிரமாய்ச் செய!


என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்.
அவர் அப்பத்தை எடுத்து நன்றி செலுத்தி அதைப் பிட்டு, அவர்களுக்கு கொடுத்து உங்களுக்காக கொடுக்கப்படுகிற என்னுடைய உடல்.
இந்த பாத்திரம் உங்களுக்காக ஊற்றப்படுகிற என்னுடைய இரத்தத்திலான புதிய உடன்படிக்கை.அநேகருடைய பாவங்களின் மன்னிப்புக்காக இது சிந்தப்படுகிறது.
நான் உங்களுக்கு ஒரு புதிய கட்டளையை கொடுக்கிறேன் 'ஒருவரில் ஒருவர் அன்பாய் இருங்கள்.நான் உங்களில் அன்பாயிருக்கிறது போல, நீங்களும் ஒருவரில் ஒருவர் அன்பாயிருக்க வேண்டும்.
நீங்கள் இப்படி ஒருவரில் ஒருவர் அன்பாய் இருந்தால்,நீங்கள் என்னுடைய சீடர்கள் என்று எல்லா மனிதர்களும் அறிந்துகொள்வார்கள்.
ஆண்டவரே, உம்மை நான் எல்லா இடங்களிலும் பின்பற்றுவேன். நான் உமக்காக என் உயிரையும் கொடுப்பேன்.
பேதுருவே, காலையில் சேவல் கூவுவதற்கு முன்னே நீ என்னை மூன்று தடவைகள் மறுதலிப்பாய்'



அன்று மாலை இயேசுவும் அவருடைய சீடர்களும் நகரத்தை விட்டு வெளியேறினார்கள். ஆனால் யூதாஸ் மாத்திரம் அவர்களுடன் இருக்கவில்லை...
நான் உங்களை விட்டு போகப்போகிறேன், பிதாவானவர் காலமெல்லாம் உங்களோடிருக்கும் படி தம்முடைய பரிசுத்த ஆவியானவரை அனுப்புவார்.அவர் உங்களுக்கு உதவுவார்,எப்பொழுதும் உங்களோடிருப்பார்.
நான் போகிற இடத்திற்கான வழியை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்.
'வழியும், உண்மையும், வாழ்வும் நானே. என் மூலமாய் அன்றி ஒருவனும் பிதாவினிடத்தில் வர முடியாது.
நீங்கள் இங்கே இருங்கள். நான் அங்கு போய் மன்றாடப் போகிறேன்.
'பிதாவே! உமக்கு விருப்பமானால் என்னை விட்டு இந்த பாத்திரத்தை எடுத்துவிடும்
ஆயினும் என் விருப்பமல் ல, உமது திட்டம் செய்யப்படட் டும்!


நீங்கள் இன்னும் நித்திரை செய்து இளைப்பாறுகிறீர்களோ? எழுந்திருங்கள் போவோம்! என்னை காட்டிக்கொடுக்கிறவன் இதோ வருகிறான்.
நான் முத்தமிடுகிறவனே அவர். அவரை கைது செய்து காவலுடன் கூட்டிப்போங்கள்.
ரபீ வாழ்க!
'யூதாஸே, மனுமகனை முத்தத்தினால் காட்டிக்கொடுக்கிறாயோ?'
கர்த்தாவே நாங்கள் எங்கள் வாள்களினால் எதிர்த்து தாக்கட்டுமா?
நிறுத்துங்கள்! வேண்டாம்.
இயேசுவை அழைத்துச் செல்ல அனுமதித்தார், சீடர் எல்லோரும் அவரை விட்டு ஓடி விட்டார்கள்.


அவரைப் பிடித்து பிரதம மதகுருவின் வீட்டிற்குக் கொண்டுப்போனார்கள், பேதுருவும் யோவானும் தூரத்திலே பின் தொடர்ந்து போய்க் கொண்டிருந்தனர்....
பேதுரு முற்றத்தில் பதுங்கினார்.....
நீயும் அந்த மனிதனின் சீடர்களில் ஒருவன் அல்லவா?
இல்லை! 'பெண்ணே, அவரை எனக்குத் தெரியாது.
நீயும் அவர்களில் ஒருவர் தானே?
நிச்சயமாக இல்லை!
நிச்சயமாகவே! இவனும் இயேசுவுடனே இருந்தான். ஏனெனில் இவன் கலிலேயன!
'மனிதனே, நீ என்னத்தைப்பற்றிப் பேசுகிறாய் என்றே எனக்குத் தெரியாது.'





கொக்க கோ கோ....
அப்பொழுது இயேசு பேதுருவை நேருக்கு நேராய் பார்த்தார்....
அவர்கள் அவருடைய கண்களைக் கட்டிவிட்டு, 'உன்னை அடித்தது யார் என்று தீர்க்கதரிசனமாய் சொல?'
பொழுது விடிந்த போது இயேசு யூதத் தலைவர்களின் கூட்டத்திற்கு முன் கொண்டுவரப்பட்டார்.பிரதான ஆசாரியன் இயேசுவை விசாரிக்கிறார்....
அப்படியானால் நீ இறைவனின் மகனோ?'
'நான் அவர்தான் என்று நீங்கள் சொல்வது சரி'
இவன் இறைவனை நிந்தித்துப் பேசுகிறான்! இவர் மரணத்தண்டனைக்குரிய குற்றவாளி. ரோமர்கள் இவரை முயற்சி செய்யட்டும்!


ரோமானிய ஆளுனரான பிலாத்துவிடம் இயேசு கொண்டுவரப்பட்டார்,யூதத் தலைவர்கள் பார்ப்பவர்களையெல்லாம் தூண்டிவிட்டனர்.அவர்கள் எல்லாவிதமான குற்றச்சாட்டுக்களையும் கூறினர்...
இந்த குற்றச்சாட்டுக்களுக்கு நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? ஒன்றுமில்லையா?
என்ன செய்தா ய்?
உண்மைக்கு சாட்சி கொடுக்கும்படியே நான் வந்தேன்.
உண்மை என்றால் என்ன?
நான் இவனுக்கு எதிராய் குற்றம் சாட்டுவதற்கான எந்த ஆதாரத்தையும் காணவில்லை.பஸ்கா காலத்தில் ஒரு கைதியை நான் உங்களுக்காக விடுதலை செய்வது வழக்கம் எனவே பரபாஸையா,'யூதரின் அரசனையா' விடுதலை செய்ய வேண்டும்?


பரபாஸ்!
பரபாஸை விடுதலை செய்!



யூதருடைய அரசன் என்று சொல்லுகிற இவனுக்கு நான் என்ன செய்யவேண்டும்?
அவனை சிலுவையில் அறையும்!
தன்னை ஒரு அரசன் என சொல்லுகிறவன்!
நீர் இந்த மனிதனைப் போகவிட்டால்,நீர் ரோம பேரரசன் சீசருக்கு நண்பனல்ல.


அவருக்கு பதிலாக நீங்கள் சுதந்திமாக செல்லலாம்.
இயேசுவுக்கு பதிலாக பரபாஸ் விடுதலை செய்யப்பட்டான். அவன் ஒரு கொலை வழக்கில் குற்றவாளியாக கண்டறியப்பட்டவன்...


....37,38,39!


இந்த மனிதனின் இரத்தப்பழிக்கு நீங்களே பொறுப்பாளிகள். நானோ குற்றமற்றவன்.


யூதரின் அரசரே வாழ்க!


இதோ அந்த மனிதன் தான்!
சிலுவையில் அறையுங்கள்!
சிலுவையில் அறையுங்கள்!
சிலுவையில் அறையுங்கள்!
எருசலேமின் தெருக்களில் இயேசு சிலுவையை சுமந்து செல்ல வேண்டும் என பிலாத்து இராணுவ வீரர்களிடம் ஒப்படைத்தார்...சிலுவையில் அறைவது ஒரு பயங்கரமான மரண தண்டனை.
மரணதண்டனை கொடுக்கப்படும் இடம் நகர சுவர்களுக்கு வெளியே இருந்தது. அந்த இடத்திற்கு கொல்கொதா என்றனர். கொல்கொதா என்பதன் அர்த்தம் மண்டையோட்டின் இடம் எனப்படும்.
அங்கே வீரர்கள் இயேசுவை மரத்தில் ஆணி அடித்தார்கள்...




அந்நேரத்தில் அவரைக் காட்டிக்கொடுத்த யூதாஸ், அவன் செய்த காரியத்தைக் குறித்து மனத் துயரம் அடைந்தார்.
நான் பாவம் செய்து விட்டேன்.
குற்றமற்ற இரத்தத்தை நான் காட்டிக்கொடுத்து விட்டேன்.
அதற்கு அவர்கள், அதுபற்றி எங்களுக்கு என்ன? அது உன்பாடு!
இயேசு இரண்டு கள்வர்களுக்கு நடுவில் சிலுவையில் அறையப்பட்டார்.
பிதாவே இவர்களை மன்னியும். ஏனெனில் இவர்கள் செய்வது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள்.




சிலுவையில் அவர் தலைக்கு மேலாக அவருக்குக்கெதிரான குற்றச் சாட்டாக இவர் இயேசு, யூதரின் அரசன் என்று மூன்று மொழிகளிலும் எழுதி வைத்தார்கள்...
IESVS NAZARENVS REX IVDAEORVM
அங்கே அவர்கள் இயேசுவுக்கு கசப்பு கலந்த திராட்சை ரசத்தை குடிக்கும்படி கொடுத்தார்கள்.
வீரர்கள் அவரது உடைக்காக சீட்டுப்போட்டார்கள்.
ஆம்! அவர் மற்றவர்களை காப்பாற்றவில்லையா?
நீர் தேவனுடைய குமாரனானால் சிலுவையில் இருந்து இறங்கி வாரும்!
உன்னையும் காப்பாற்றிக் கொண்டு எங்களையும் காப்பற்றும்!
நீ கடவுளுக்கு பயப்படுவதில்லையா? நாம் நீதியின்படி தண்டனை பெற்றிருக்கிறோம்,ஆனால் இந்த மனிதரோ எந்தப் பிழையும் செய்யவில்லை.
உமது அரசில் நீர் வரும்போது என்னையும் நினைவில் வைத்துக்கொள்ளும்!
நான் உனக்கு ஒரு உண்மையை சொல்கிறேன், இன்றைக்கே நீ என்னுடன்கூட பரதீசில் இருப்பாய்.



அப்பொழுது பகல் பன்னிரெண்டு மணியாயிருந்தது. பிற்பகல் மூன்று மணி வரை பூமி முழுவதையும் இருள் மூடியது.
தனது தாயாகிய மரியாளும்,தான் நேசித்த சீடனான யோவானும் சிலுவைக்கு அருகில் இருப்பதைக் கண்டு...
இப்பொழுது நீங்கள் தாயும் மகனும்.
என் கர்த்தாவே, என் கர்த்தாவே ஏன் என்னை கைவிட்டீர்.?
எனக்கு தாகமாக உள்ளது.
பிதாவே, உமது கைகளில் என் ஆவியை ஒப்புக்கொடுக்கிறேன்.
எல்லாம் முடிந்தது.


இயேசு பகல் மூன்று மணியளவில் இறந்து விட்டார்.ஒரு இராணுவ வீரர் அவரை ஈட்டியால் விலாவில் குத்தினான் அப்பொழுது இரத்தமும் தண்ணீரும் பீறிட்டு பாய்ந்தது. அவன் இருதயம் உடைந்துப் போனது.
அவர் கொல்லப்படுவதற்க்கு கொண்டுப்போகப்படும் செம்மறியாட்டைப் போல் இருந்தார்.
அவரோ எங்கள் மீறுதல்களினிமித்தம் ஊடுருவக் குத்தப்பட்டார். எமது அக்கிரமங்களுக்காகவே அவர் நொருக்கப்பட்டார்.
வரப்போகும் மேசியா அவர்தானா? இல்லையா?
வாருங்கள் அவரை அடக்கம் செய்ய முடியுமா என கேட்போம்.
அரிமத்தியா பட்டணத்தைச் சேர்ந்த யோசேப்பும், நிக்கொதேமுவும் இயேசுவின் உடலை சிலுவையில் இருந்து கீழே இறக்கி மென்பட்டுத் துணிகளில் வைத்து உடலைச் சுற்றிக் கட்டினார்கள். பின் கல்லறையில் வைத்தார்கள்...



பஸ்கா பண்டிகைக்காக அமைக்கப்பட்ட ஓய்வு நாற்களுக்குப் பிறகு சில பெண்கள் கல்லறைக்கு செல்கிறார்கள்...
அங்கே கல்லறை வாயிலில் வைக்கப்பட்ட கல் புரட்டி தள்ளப்பட்டிருந்தது!
உயிருடன் இருக்கிறவரை நீங்கள் ஏன் இறந்தவர்களிடையே தேடுகிறீர்கள்? அவர் உயிருடன் எழுந்து விட்டார்! போய் சீடர்களிடம் சொல்லுங்கல்!
இதனை கேள்விப்பட்ட பேதுருவும், யோவனும் கல்லறைக்கு ஓடினர்.
என்ன நடந்தது?
கல்லறை முழுவதும் வெறுமையாய் இருக்கிறது.



வெளியே தோட்டத்திலிருந்து...
பெண்ணே, நீ ஏன் அழுகிறாய்? நீ யாரைத் தேடுகிறாய்?
அவரை தோட்டக்காரன் என நினைத்து, ஐயா நீர் அவரை எங்கே வைத்தீர்?
மரியாள்!
போதகரே!
நீ என் சகோதரர்களிடம் போய், நான் என் பிதாவினிடத்திற்க்கும், உங்கள் பிதாவினிடத்திற்க்கும், என் தேவனிடத்திற்க்கும்.உங்கள் தேவனிடத்திற்க்கும் திரும்பிப் போகிறேன் என்று சொல்.


அந்த நாளில் ஏமாற்றமடைந்த இரண்டு இயேசுவின் சீடர்கள், இயேசுவின் மரணதண்டனை குறித்து வழிப்போக்கர் ஒருவருடன் விவாதத்தில் ஈடுப்பட்டனர்.
தீர்க்கதரிசிகளை நீங்கள் நம்பவில்லையா? மேசியா இந்த வேதனைகளை அனுபவித்த பின்பல்லவா மகிமைக்குள் போகவேண்டும்? இது ஏற்கனவே புத்தகங்களில் எழுதப்பட்டுள்ளது.அதில் உள்ள அனைத்தும் அவரைப் பற்றியது.
அவர் அப்பத்தை பிட்டு சாப்பிட்ட பின் அவர்களுடைய கண்கள் திறந்தன, உடனே அவர் அவர்களுடைய பார்வையில் இருந்து மறைந்துப்போனார்.
ஆம் அது இயேசுவே!
அவர்கள் எழுந்து, உடனடியாக ஜெருசலேமுக்குத் திரும்பிப் போனார்கள். அவர்களின் நண்பர்களை சந்திப்பதற்கு...
நாங்கள் கடவுளைக் கண்டோம்!
மரியாள் மற்றும் பேதுருவும்!
அனைவரும் திடீரென்று...
உங்களுடனே சமாதானம் இருப்பதாக!
உங்கள் உள்ளங்களில் ஏன் சந்தேகம் எழும்புகிறது? என்னுடைய கைகளையும் கால்களையும் பாருங்கள்!
என் கடவுள்!


இயேசு நாற்பது நாற்களில் தம் சீடர்களுக்கு தோன்றினார். 500 பேரை ஒரே நேரத்தில் சந்தித்திருக்கிறார். பின்னர் அவருடைய சீடர்கள் கலிலேயாவுக்கு திரும்பினார்கள்.ஒரு நாள் அவர்கள் மீண்டும் மீன் பிடிக்கும் போது..
நண்பர்களே! உங்களிடம் மீன் இல்லையா?
இல்லை, ஒன்றும் பிடிப்படவில்லை!
வலையைப் படகின் வலது புறமாக வீசுங்கள்!
என்ன அருமை! என்ன ஒரு மீன் பிடிப்பு!
அவர் கர்த்தர்!
போதகரே!
எழுந்து வாருங்கள் என்னுடன் சாப்பிட!


பேதுருவே என்மீது உண்மையாகவே அதிக அன்பு வைத்திருக்கிறியா?
இயேசு மூன்று முறை பேதுருவினிடம் இந்த கேள்வியை கேட்டார்.
ஆம் ஆண்டவரே, உங்களுக்கு தெரியும் நான் அன்பு வைத்திருக்கிறேன் என்று.
என் செம்மறியாடுகளைப் பராமரிப்பாயாக.
என்னைப் பின்பற்று!
வானத்திலும்,பூமியிலும் முழு அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. எல்லா இனத்தவர்களையும் சீராக்குங்கள்.பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் பெயரால் அவர்களுக்கு ஞானஸ்தானம் கொடுங்கள் நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவற்றிற்கும் கீழ்ப்படியும்படி அவர்களுக்குக் கற்பியுங்கள்.
இந்த உலகம் முடியும் மட்டும் நான் எப்பொழுதும் நிச்சயமாக உங்களுடன் இருக்கிறேன்.
இந்த வார்த்தைகளுக்குப் பிறகு, இயேசு பூமியை விட்டு வெளியேறினார்.அவர் பரலோகத்திற்க்கு அவர் எடுத்துக் கொள்ளப்படுகிறார். ஆனால் மீண்டும் வருவேன் என கூறியுள்ளார்.



இயேசுவின் சீடர்கள் பின்னால் இருந்து ஜெபிக்க ஆரம்பித்தனர்.50 நாட்களுக்குப் பிறகு பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மீது வருகிறார் இயேசுவில் இருந்த அதே ஆவி இப்பொழுது அவர்களிலும் அவரை விசுவாசிப்பவர்களிலும் வாழ்கிறது. அவரை பின்பற்றுபவர்கள் அவருடைய சக்திவாய்ந்த சாட்சிகள்.இயேசுவைப் பற்றி அதிகமான மக்கள் கேட்கின்றனர்.
மரணம் இயேசுவை மேற்கொள்ள முடியவில்லை.தேவன் அவரை மீண்டும் உயிருடன் எழுப்பினார் அவரை ஆண்டவராகவும் மேசியாவுமாக்கினார்.
பெரும் எதிர்ப்பையும் மீறி இயேசுவின் சீடர்கள் உலகிற்க்கு சென்றனர்.
இயேசு தேவனின் மகன்! நாமும் தேவனின் குழந்தைகளாக மாறலாம்!
இந்த செய்தி கடிதங்கள் மூலமாகவும் அறிவிக்கப்படுகிறது.
நற்செய்தியைக் குறித்து நான் வெட்கப்படவில்லை. அதுவே விசுவாசிக்கிற ஒவ்வொருவருக்கும், தேவனுடைய இரட்சிப்பைக் கொடுக்கின்ற வல்லமையாய் இருக்கிறது. இது ஏற்கனவே புத்தகங்களில் எழுதப்பட்டுள்ளது. நீங்கள் இதை நம்பினால் தேவனுடைய பார்வையில் நல்லவராய் இருக்கிறீர்கள். அப்பொழுது நீ வாழ்வாய்!
இப்பொழுது உலகமெங்கிலும் அதிகமான மக்கள் ஒன்றாக ஜெபிக்கவும்,வேதத்தை படிக்கவும் கூடுகிறார்கள். கடவுளின் அருகில் வாழ்கிறார்கள்,அவருடைய தயவை அனுபவிக்கிறார்கள். அவர்கள் ஒருவரை ஒருவர் நேசிக்கிறார்கள்.மற்றும் தேவைப்படுபவர்களுக்கு உதவுகிறார்கள் அவர்கள் தங்கள் எதிரிகளைக் கூட நேசிக்கிறார்கள். அவர்கள் தங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டதை நினைவூட்டுவதற்காக அப்பத்தை உடைத்து திராட்சை ரசத்தை பரிமாறுகிறார்கள். மேலும் அவர்கள் கடவுளின் ஆவியால் நிரம்பிய புதிய மற்றும் வல்லமை மிக்க வாழ்க்கையை பெற்றுள்ளனர்.


மனிதர்கள் நிம்மதியாக வாழ்வதை இயேசு சாத்தியமாக்கினார்.
அவருடைய அன்புக்கு நன்றியுடன் இருங்கள்! அவரிடம் அன்பைப் பெற்றுக் கொள்ளுங்கள்! மேலும் அவரை ஆராதியுங்கள்!
தேவன் தம்முடைய மகனை உலகிற்கு அனுப்பியது நம்மை நியாயந்தீர்ப்பதற்காக அல்ல, மாறாக நம்மை இரட்சிப்பதற்காகவே ஏனென்றால் தேவன் நம்மை மிகவும் நேசிக்கின்றார். தேவன் உலகத்தை அதிகமாக நேசித்தப்படியால், தனது ஒரே பேறான மகனைக் கொடுத்தார். அவரை நம்புகிற ஒவ்வொருவரும் இனி இழக்கப்பட மாட்டார்கள், ஆனால் நித்திய ஜீவனைப் பெறுவார்கள்!
WILLEM DE VINK

## வேதாகமம்

இயேசுவின் சரித்திரம் வேதத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. வேதத்தை விட வேறு எந்த புத்தகமும் அதிகம் வாசிக்கப்படவில்லை.அடிக்கடி வாசிக்கப்படும் பல புத்தகங்கள் அடங்கிய ஒரு நூல். இந்நூல்கள் அனைத்தையும் எழுத 1500 வருடங்கள் ஆனது. வேதம் சுமர் 1900 ஆண்டுகளுக்கு முன் எழுதி முடிக்கப்பட்டது. மனிதர்களின் வாழ்க்கையில் தேவன் எவ்வாறு ஈடுப்பட்டுள்ளார் என்பது பற்றிய அனைத்து சம்பவங்களும் இதில் உள்ளது. கடவுள் யார் என்பதை இயேசுவின் கதை மிக தெளிவாக காட்டுகிறது.

## இயேசுவின் வாழ்க்கை வரலாறு



வேதத்தில் இயேசுவின் வாழ்க்கையை விவரிக்கும் நான்கு புத்தகங்கள் உள்ளன. அவை அவற்றை எழுதிய ஆசிரியர்களின் பெயரால் அழைக்கப்படுகிறது. அவ் ஆசிரியர்கள் அனைவரும் இயேசுவின் காலத்தில் உள்ளவர்கள்.

1. **மத்தேயு** - இயேசுவின் சீடர் இவர் வரி வசூலிப்பவராகப் பணியாற்றியவர். குறிப்பாக இஸ்ரயேல் மக்களுடன் (யூத மக்கள்) இயேசு எவ்வாறு நடந்துக் கொண்டார் என்பதை விவரிக்கிறார்.

2. **மாற்கு** - இயேசு தனது வேலையை செய்தபோது ஒரு இளைஞனாக இருந்தவர். இயேசு செய்த அற்புதங்களை பற்றி கொஞ்சம் எழுதியிருக்கிறார்.

3. **லூக்கா** - மருத்துவராக இருந்தவர் தனிப்பட்ட முறையில் இயேசுவைப் பற்றி தெரியாது. இயேசு மக்களிடம் எவ்வாறு நடந்துக் கொண்டார் என்பதை விவரித்தார்.

4. **யோவான்** - இயேசுவின் சீடனாக இருந்தார். முக்கியமாக இயேசு யார் என்பதை இவர் காட்டுகிறார். மக்களை பாவத்திலிருந்து மீட்க மனிதனாக பிறந்த கடவுள் இயேசு என்றார்.


## இயேசுவின் பிறப்பு

இயேசுவின் தாயான மரியாளுக்கு, இயேசு கருவுற்றபோது திருமணமாகி இருக்கவில்லை. அவர் பிறக்கும் வரை அவள் கன்னியாகவே இருந்தாள். ஆனால் இயேசு பிறக்க முடியும் என கடவுள் அறிந்திருந்தார். இயேசுவின் காலத்திற்க்கு முன்பே எழுதப்பட்ட புத்தகங்களில் இந்த அற்புதம் அறிவிக்கப்பட்டது. இயேசு ஒரு ஹீரோவாகவோ, விஷேடமாகவோ பிறக்கவில்லை. எந்த அறையும் கிடைக்காததால் தொழுவத்தில் பிறந்தார்.


## இயேசுவின் அற்புதங்கள்

இயேசு பல அற்புதங்களை செய்தார் ஆனால் வேதம் 40க்கு மேற்பட்ட குணப்படுத்தல்களைக் குறிப்பிடுகிறது. இந்த அற்புதங்களின் மூலம், தேவனின் அன்பையும் வல்லமையையும் இயேசு காட்டினார். மேலும் மக்களுக்கு உதவவும் அவர்களை மகிழ்ச்சி அடைய செய்யவும் விரும்புகிறார்.





## இயேசுவின் மரணமும் உயிர்த்தெழுதலும்



***ஏன் இயேசு மரித்தார்? வேதத்தில் அதற்க்கான விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.***

சில நேரங்களில் எல்லா மக்களும் தவறான செயல்களை செய்கிறார்கள். கடவுள் ஏற்றுக்கொள்ளாத மற்றும் அவருக்கு கோபம், வருத்தம் தரும் விடயங்களை, அவை பாவம் என அழைக்கப்படுகிறது.அந்த பாவங்கள் கடவுளுடன் நட்புக் கொள்ள விடாமல் தடுக்கலாம்.

அதனால் தான் இயேசு வந்தார். நமது பாவங்களுக்கான தண்டனையை இயேசு தம் சொந்த விருப்பத்தின் பேரில் ஏற்றுக்கொண்டார். அதற்க்கான தண்டனைதான் மரணம். இயேசு நமக்காக மரித்ததால் நாம் மீண்டும் தேவனோடு நட்பு கொள்ள முடியும். ஆனால் நாம் செய்த பாவத்திற்காக வருந்த வேண்டும்.

இயேசு மரணத்தில் இருந்து உயிருடன் எழுந்தார். தேவன் அவரை மீண்டும் வாழ வைத்தார். இதன் மூலம் தேவன் மரணத்தை விட வலிமையானவர் என்பதைக் காட்டினார்.

இயேசு இப்பொழுது கடவுளோடு வாழ்கிறார். அவர் வாழ்வதால், அவர் எப்பொழுதும் நம் நண்பராக இருக்க முடியும். கடவுளுக்கு மகிழ்ச்சியைத் தரும் விதத்தில் வாழ அவர் நமக்கு உதவ விரும்புகிறார்.

### ஜெபம்

*நீங்கள் செய்த தவறான காரியங்களுக்காக நீங்கள் வருந்தினால், கடவுளுடன் நீங்கள் நட்புக் கொள்ள விரும்பினால். இப்படி ஒரு ஜெபத்தை ஜெபிக்கலாம்.*
*“அன்பின் ஆண்டவரே, நீர் என்னை நேசிக்கின்றீர்.*
*உமது ஒரே பேரான குமாரனான இயேசுவை கொடுத்தீர்.*
*என்னுடைய எல்லா பாவங்களுக்காக அவர் சிலுவையிலே மரித்தார்.*
*எனது எல்லா பாவங்களுக்காகவும் தயவாய் என்னை மன்னியும்.*
*இயேசுவே நீர் என் பக்கமாய் இருக்கின்றமைக்காக நன்றி.*
*நான் எப்பொழுதும் உம்மோடே இருக்க வேண்டும்.*
*நான் எப்படி வாழ வேண்டும் என்று நீர் விரும்புகிறீரே அப்படி வாழ எனக்கு உதவுவீரா?*
*நீர் எப்பொழுதும் என் அருகில் இருப்பீரா?*
*என் ஜெபத்திற்கு பதில் கொடுத்ததால் நன்றி*
*நீர் வாக்குறுதியளித்ததை செய்யும்.”*

# இயேசுவும்

இயேசுவின் கதை ஒரு திறந்த முடிவைக் கொண்டுள்ளது. இயேசு அன்று இன்றும் ஏராளமான மக்களுக்கு நண்பராய் இருக்கிறார். உலகம் இன்று மாறிவிட்டது மக்கள் கழுதையில் குதிரையில் பயணம் செய்யாமல், கார் விமானத்தில் பயணம் செய்கின்றனர். ஆனால் இயேசுவிடம் எந்த வித்தியாசமும் இல்லை. அவர் இஸ்ரவேலில் இருந்த போது அருகாமையில் இருந்தது போலவே தான் இப்பொழுதும். அவர் கண்ணுக்கு தெரியாதவராக இருக்கலாம், ஆனால் அவர் உண்மையானவர். அவர் இன்று உங்களுக்கு நண்பராக இருக்க விரும்புகிறார். நீங்கள் அவருக்கு செவிசாய்து அன்புக்கூறலாம்.

நீங்கள் இயேசுவைப் பற்றியும் அவருடன் வாழ்க்கையை பற்றியும் மேலும் அறிய விரும்புகிறீர்களா? நீங்கள் செய்ய வேண்டியது.

1. **உங்களுக்காக வேதத்தை படிக்க ஆரம்பியுங்கள்.**
(உதாரணமாக லூக்க எழுதிய புத்தகத்தை படிப்பதன் மூலம் ஆரம்பிக்கலாம்).

2. **ஜெபிக்க ஆரம்பித்தல்**
(தேவனோடு பேசுவதும் அவர் வார்த்தைக்கு செவி கொடுப்பதும்.- நீங்கள் விஷேடமான வார்த்தைகளை பாவிக்க வேண்டியதில்லை).

3. **இயேசுவையும் வேதத்தையும் பற்றி மற்ற மக்களிடம் பேசுங்கள்**. தம்மை பின்பற்றுபவர்கள் ஒன்றாக சந்தித்து, அவரைப் பற்றி மேலும் அறிந்துக் கொள்ளும் போது ஒருவரை ஒருவர் உட்சாகப்படுத்த வேண்டும் என்று இயேசு விரும்புகின்றார்.

*உரை மற்றும் விளக்கப்படங்கள்: வில்லியம் டீ வின்க்.*
*Copyright © 1993 Stichting Wereldtaal, Houten, The Netherlands.*
*Published in Dutch as "Jezus Messias".*
*Edition in Tamil (Sri Lanka) © 2022*
*Digital copyright under the terms of the Creative Commons BY-SA license*
*All rights of translation, reproduction and adaptation reserved for all countries.*
*e-mail : jmpbk.app@gmail.com*
*https://www.jesusmessiahcomicmedia.com/srilanka*

*இயேசு கிறிஸ்துவின் உண்மை சம்பவம். அவர் சுமார் 2000 வருடங்களுக்கு முன் வாழ்ந்தவர். அவரை சந்தித்த அனைவரும் வியந்தனர் அவர் செய்ததை யாரும் செய்ததில்லை அவர் சொன்னதை யாரும் சொன்னதில்லை இயேசு இருந்த இடத்தில் தொடர்ந்தும் அற்புதங்கள் நிகழ்ந்தன. ஆவர் சொல்வதை கேட்ட அக்கறையுள்ள அனைவருக்கும் மகிழ்ச்சியை கொண்டுவந்தார். திடிரென்று அது முடிவுக்கு வந்தது. அவரது எதிரிகள் அவரை சிலுவையில் அரைந்தனர். ஆனால் அது அப்படியே முடிவடையவில்லை அது எப்படி முடிவடைந்தது என்பதை நீங்களே படியுங்கள் இயேசு கிறிஸ்துவின் கதை எவ்வாறு தொடர்கின்றது என்பதை பாருங்கள்.*



*மொழி: தமிழ் (இலங்கை)*

*Language: Tamil (Sri Lanka)*

*ISBN: 978-94-93178-93-9*